# 7—வது முறையாகக் கழக ஆட்சி அமைய வேண்டுமென்றால்,

# களத்தில் இறங்கி, பிரச்சாரப் பணிகளில் இப்போதே ஈடுபடுங்கள்!

## புதுக்கோட்டை கணேஷ் — கஸ்தூரிரெத்னா திருமண வரவேற்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கழகத்தினருக்கு அன்புக்கட்டளை!

புதுக்கோட்டை,பிப்.11–

**புதுக்கோட்டையில் புதுக்கோட்டை மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் செ. கணேஷ் - கஸ்தூரி ரெத்னா இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.**

**அப்போது அவர், தம்பி கணேஷ் - கஸ்தூரி ரெத்னா இருவரும் கழகத்தலைவர் அவர்களும் - திராவிட மாடலும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி மகிழ்ந்தார்.**

**திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கிய வாழ்த்துரை வருமாறு:**

புதுக்கோட்டை மாநகரக் கழகத்தின் ஆற்றல்மிகுச் செயலாளராகப் பணியாற்றி மறைந்த அண்ணன் செந்தில், புதுக்கோட்டை மாநகர மேயர் செந்தில் - திலகவதி அவர்களின் அன்பு மகன், புதுக்கோட்டை மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கணேஷ், சகோதரி கஸ்தூரி ரத்னா அவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்கள் சார்பாக, மணமக்களை வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.





துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2025) புதுக்கோட்டையைச் சேர்ந்த கழக முன்னோடி மறைந்த மிசா ஆறுமுகம் பேரனும் – புதுகை மாநகரக்கழகச் செயலாளராக பணியாற்றி மறைந்த ஆ.செந்தில் – மாநகர மேயர் திலகவதி ஆகியோரின் மகனும் – கழக இணைஞரணி நகர அமைப்பாளருமான செ.கணேஷ் – கஸ்தூரி ரெத்னா இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மண வாழ்வில் அடியெடுத்து வைக்கும் மணமக்கள் இருவரும் அன்போடும், சுயமரியாதையோடும், ஒற்றுமையோடும் இல்வாழ்வை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். தம்பி கணேஷ் – கஸ்தூரி ரெத்னா இருவரும் கழகத்தலைவர் அவர்களும் – திராவிட மாடலும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி மகிழ்ந்தார். உடன் முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என். நேரு மற்றும் கழக நிர்வாகிகள், குடும்பத்தினர் உள்ளனர்.

இந்தத் திருமணத்தை நடத்தி வைப்பதற்கு நாளைக்கு தேதி கொடுத்து இருந்தேன். ஆனால், நாளை காலை நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது தலைமையில், தமிழ்நாடு அரசின் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்த இருக்கிறார். எனவே இன்றைக்குத் திருமண வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்த வேண்டும் என்று வந்திருக்கிறேன்.

### உற்சாகமான வரவேற்பு!

வருகின்ற வழியெங்கும் உற்சாகமான வரவேற்பு அளித்த புதுக்கோட்டை வடக்கு மற்றும் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மீண்டும் என் அன்பையும், நன்றியையும், சிறப்பான வரவேற்பை அளித்த அண்ணன் செல்லபாண்டியன் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் சொந்த வீட்டில் ஒரு திருமணம் நடந்தால் எவ்வளவு உணர்ச்சிவசப்படுவோமோ, உணர்வுப்பூர்வமாக இருப்போமா, அதே உணர்வோடு தான் இந்தத் திருமண விழாவில் நான் பங்கேற்று இருக்கிறேன். ஏனென்றால், இது கழகக் குடும்பம். அதைவிட முக்கியம். இது இளைஞர் அணியின் குடும்பம். இது எல்லாவற்றை விடவும் மிக முக்கியம் என்னவென்றால், இது மிசா குடும்பம்.

எப்படி நம் கழகத் தலைவர் அவர்கள் மிசா நெருக்கடியை எதிர்கொண்டாரோ, அதே மாதிரிதான் மறைந்த அண்ணன் செந்தில் அவர்களின் தந்தை பெரியவர் ஆறுமுகம் அவர்களும் மிசா கொடுமையில் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார்.

### கழகப் பணிக்கு அங்கீகாரம்!

அதனாலயே அவர் `மிசா' ஆறுமுகம் என்று அனைவராலும் அழைக்கப்பட்டவர். அப்படிப்பட்டவரின் மகனாகப் பிறந்து அண்ணன் செந்தில் அவர்கள், கழக இளைஞர் அணியில் இருந்து பணிகளை அவர் தொடங்கினார். ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்டத்தின் இளைஞர் அணி அமைப்பாளராக மூன்று முறை சிறப்பாகப் பணியாற்றினார். அதேபோல் புதுக்கோட்டை மாவட்டக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது, வடக்கு மாவட்ட கழகத்தின் பொருளாளராகவும் சிறப்பாகப் பணியாற்றினார்.

அவரின் கழகப் பணிகளை அங்கீகரிக்கின்ற வகையில், நம் தலைவர் அவர்கள் அண்ணன் செந்தில் அவர்களை மாநகரக் கழகச் செயலாளராக உயர்த்தினார். அது மட்டுமல்ல, அக்கா திலகவதி அவர்களை மேயராக மக்கள் பணியாற்றுகின்ற வாய்ப்பையும் நம் கழகத் தலைவர் அவர்கள் தந்தார்.

தாத்தா வழியில், தந்தை வழியில், நம் தம்பி, மணமகன் கணேஷ் அவர்களும் இன்றைக்குக் கழகத்திற்காக உழைத்துக் கொண்டு இருக்கிறார். இனிமேலும் உழைப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அப்பாவை போலவே தம்பி கணேஷ் அவர்களும், இன்றைக்கு இளைஞர் அணியில் மிகச் சிறப்பாகத் திறம்படப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். ஆகவேதான், நாம் அனைவரும் நம் குடும்ப நிகழ்ச்சி போல, இந்தத் திருமண விழாவில் கலந்து கொண்டுள்ளோம்.

### முதலமைச்சரின் சாதனைகள்தான்!

இந்த நிகழ்ச்சியின் மூலம் உங்கள் ஒவ்வொருவரின் முகத்தையும் பார்க்கும் பொழுது, மகிழ்ச்சியும் உற்சாகமும் கரைபுரண்டு ஓடுகின்றன.

அதற்குக் காரணம் நம் திராவிட மாடல் அரசின், நம் முதலமைச்சரின் சாதனைகள் தான். குறிப்பாக, மகளிர் இங்கு நிறையப் பேர் வந்திருக்கிறீர்கள். மகளிருக்காக நம் கழக அரசு செய்த சில திட்டங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மகளிரின் முன்னேற்றத்திற்காக ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து பார்த்துச் செய்து கொண்டிருக்கிறார். 2021-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன் நம் முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து, `மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம்' தான்.

### 8 லட்சம் மாணவ – மாணவிகள்

இந்த நான்கு வருடங்களில் இந்தத் திட்டத்தின் மூலம் மகளிர் 620 கோடி பயணங்களை மேற்கொண்டு உள்ளார்கள். ஒவ்வொரு மகளிரும் கிட்டத்தட்ட மாதம் ஆயிரம் ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

அரசு பள்ளியில் படிக்கும் மாணவிகள் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, உயர்கல்வி படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்ட வேண்டுமென்று, கல்வி உதவித் தொகையாகப் புதுமைப்பெண் என்ற திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு மகளிருக்கும் அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

மாணவிகளுக்கு மட்டுமல்ல, மாணவர்களுக்கும் `தமிழ்ப்புதல்வன்' என்று திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவனுக்கும் கல்வி ஊக்கத்தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 8 லட்சம் மாணவ மாணவிகள் பயன் பெறுகிறார்கள்.

### `காலை உணவுத் திட்டம்!'

இந்தியாவிலேயே எங்கும் இல்லாத திட்டமாக முதல் மாநிலமாக நம் மாநிலத்தில் தான் முதலமைச்சரின் `காலை உணவுத் திட்டம்' என்ற மகத்தான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அரசு பள்ளியில் ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து அரசு பள்ளி மாணவர்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் 20 லட்சம் மாணவர்கள் பயன் பெற்றுக் கொண்டு வருகிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக நம் கலைஞர் மகளிர் உரிமை தொகையின் மூலம் கிட்டத்தட்ட ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய், நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

### பட்ஜெட்டில், தமிழ்நாடு இல்லை!

சட்டமன்றத்தில் எனது பேச்சில் அறிவித்து இருக்கிறேன். விரைவில் தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு அனைத்து மகளிருக்கும் `கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்' நிச்சயம் கிடைக்கும் என்ற வாக்குறுதியை சட்டமன்றத்தில் கொடுத்து இருக்கிறேன்.குறிப்பாக இந்த அரசு, மகளிருக்கு உழைக்கின்ற அரசாக இருக்கிறது.

உங்களுக்குத் தெரியும் இரண்டு நாட்களுக்கு முன்பு ஒன்றிய அரசு பட்ஜெட் போட்டார்கள். அந்தப் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஒரு திட்டத்தைக் கூட ஒதுக்கவில்லை. ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை.

இன்னும் சொல்ல போனால் அந்தப் பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்கவில்லை.

அப்படிப்பட்ட ஒன்றிய அரசு அவர்களுக்கு கூஜா தூக்குகின்ற அ.தி.மு.க. ஆகிய இருவருக்கும் பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என்றால், வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில், எப்படி 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை நமது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்குக் கொடுத்தீர்களோ, அந்த வெற்றியை நீங்கள் தர வேண்டும்.

### தொடர் பிரச்சாரங்கள்!

கழகத்தினர் மக்களைச் சந்தித்து, தொடர் பிரச்சாரங்களைச் செய்து, நம் ஆட்சியின் சாதனைகளை, எடுத்துச் சொல்லி, அனைவரும் நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, ஆதரவு திரட்ட வேண்டும்.

தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு, வெற்றியைத் தேடித் தந்து நம் தலைவர் அவர்களைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக உட்கார வைக்க வேண்டும். ஏழாவது முறையாகக் கழக ஆட்சி அமைய வேண்டுமென்றால், நாம் அனைவரும் களத்தில் இறங்கி, பிரச்சாரப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கு கொடுத்து இருக்கிறார். `234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகளில் வென்று காட்டுவோம்' என்று சொல்லி இருக்கிறார். கழகத்தின் உடன்பிறப்புகளாகிய நீங்கள் அத்தனை பேரும், களத்தில் இறங்கி அந்தப் பணிகளை மேற்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில்தான் இப்படி அவர் கூறி இருக்கிறார்.

எப்படிக் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை தேடி கொடுத்தீர்களோ, அதேபோல் சட்டமன்றத் தேர்தலிலும் மிகப்பெரிய வெற்றியை நீங்கள் தேடிக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### தமிழ்ப்பெயரைச் சூட்டுங்கள்

இந்த நேரத்தில் மணமக்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள். தம்பி கணேஷ் அவர்களும், சகோதரி கஸ்தூரி ரத்னாவும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, சுயமரியாதையுடன் வாழ வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு இன்னொரு வேண்டுகோள். அவர்களுக்குப் பிறக்க போகின்ற குழந்தை, ஆண் பிள்ளையாக இருந்தாலும் சரி, பெண் பிள்ளையாக இருந்தாலும் சரி ஒரு அழகான தமிழ்ப்பெயரைச் சூட்ட வேண்டும் என்று உங்கள் அத்தனை பேரின் சார்பாகவும் மணமக்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நீங்கள் இருவரும் தந்தை பெரியாரும் பகுத்தறிவும் போல, பேரறிஞர் அண்ணாவும் மாநில சுயாட்சியும் போல, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரும் திராவிட முன்னேற்ற கழகமும் போல, நம் தலைவரும் உழைப்பும் போல பல பல்லாண்டு வாழ்க வாழ்க எனக் கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, மெய்யநாதன், நடிகர் தம்பி ராமையா, மாவட்டக் கழகச் செயலாளர்கள் செல்லபாண்டியன், துரை.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் முத்துராஜா, நீலமேகம், மாவட்டக் கழக முன்னாள் செயலாளர், பெரியண்ணன் அரசு, மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், சண்.ராமநாதன், மாநில நிர்வாகிகள் கவிதைப் பித்தன், சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா, அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், சுபாஷ் சரவணன், அசோக் பாண்டியன், வி.என்.மணி, கே.ஆர்.என்.போஸ், அரசகுமார், வழக்கறிஞர் ராமநாதன், பரணி கார்த்திகேயன், மருத்துவர் அண்ணாமலை, மாநில இளைஞர் அணித் துணைச்செயலாளர் இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சண்முகம், மணிராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை தமிழ் ராஜா, பழனியப்பன் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை தொகுதியின் கழக சட்டமன்ற உறுப்பினர் , கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் மாநில துணைச் செயலாளர் வை.முத்துராஜா தந்தையார் கா.வைரக்கண்ணு அவர்கள் அண்மையில் மறைந்தார். இந்நிலையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் 9.2.2025 புதுக்கோட்டைக்குச் சென்ற போது மறைந்த வைரக்கண்ணு அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் கே.என். நேரு, எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் பலர் உள்ளனர்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகளில் நேற்று முன்தினம் பங்கேற்க வருகை தந்த போது, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக்கழகம் சார்பில் சிறப்பான வரவேற்பை அளித்த கழக நிர்வாகிகள் – இளைஞரணி தம்பிமார்கள் – மகளிர் – பொதுமக்கள் உட்பட அத்தனைப் பேருக்கும் தன்னுடைய அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டார்.